*செய்தி வெளியீடு*

# ஏ.எல்.எஸ்., எனப்படும் அரிதான நரம்பு பாதிப்பு நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு குறைந்த விலையில், குறைந்த எடையிலான ஆதரவு கருவியை எஸ்எஸ்என் கல்வி நிறுவனம் வடிவமைத்துள்ளது.

**சென்னை, ஆகஸ்ட் 21, 2018:** சிவ நாடார் அறக்கட்டளையின் முதல் முன்முயற்சியாக அரிதான நரம்பியல் நோயால் பாதித்து தசைகளின் இயக்கம் தடைபட்ட நோயாளிகளுக்கு (ஏ.எல்.எஸ்.,) குறைந்த விலையில், குறைந்த எடையிலான ஆதரவு கருவியை வடிவமைத்துள்ளது என்பதை இன்று அறிவிக்கிறோம். இதனை கல்வி நிறுவனத்தின் உயிரிமருத்துவ பொறியியல் துறை உதவி பேராசிரியர் எம்.தனலட்சுமி எம்.இ., (பி.எச்.டி.,) தனது மாணவர்கள் எஸ்.விஸ்வநாதன், ஜி.பிரவீண்குமார் ஆகியோருடன் இணைந்து உருவாக்கியுள்ளார்.

ஏஎல்எஸ் எனப்படும் அரிதான நரம்பு பாதிப்பு நோயானது, மூளையில் உள்ள சிறு நரம்புகளின் இயக்கத்திலும், முகுதுதண்டுவடத்திலும் பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. இதனால், தலையானது நிமிர்ந்த நிலையில் இல்லாமல் தொங்கிய நிலைக்குச் செல்கிறது. இதனைப் போக்க இப்போது கருவிகள் விற்பனை செய்யப்படுகின்றன. இந்தக் கருவிகளின் மூலம் கழுத்தினை திருப்புதல் போன்ற செயல்பாட்டுகளை மேற்கொள்ள முடியும். ஆனால், இந்தக் கருவிகளால் புழுக்கம், தோலில் எரிச்சல், அதிகம் சூடாவது, கழுத்தில் வலி போன்ற பல்வேறு பிரச்னைகள் ஏற்படுகின்றன. ஆனால், எஸ்எஸ்என் கல்வி குழுமம் வடிவமைத்துள்ள கருவியானது குறைந்த விலையுடன், எளிதாக எடுத்துச் செல்லும் வகையில் இருப்பதுடன் இப்போது சந்தையில் உள்ள கருவிகளால் ஏற்படும் பல்வேறு பிரச்னைகளில் இருந்து விடுதலை அளிக்கிறது.

இந்தத் திட்டமானது கடந்த 2016-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மாணவர்களிடையே புதிய தொழில்நுட்ப முன்னெடுப்புகள் மற்றும் ஆராய்ச்சிகளைக் கண்டறிய ஊக்குவிக்கும் எஸ்எஸ்என் கல்வி நிறுவனத் திட்டத்தின் கீழ் அதற்கு நிதி அளிக்கப்பட்டுள்ளது. புதிய பொருளானது பல்வேறு நிலைகளில் சோதித்து பார்க்கப்பட்டுள்ளது. அதிக வெப்பநிலை, அதிக அழுத்தம் போன்ற சூழ்நிலைகளிலும் கருவியானது சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் கருவி இப்போது சென்னையை அடுத்த முட்டுக்காட்டில் உள்ள மாற்றுத் திறனாளிகள் அதிகாரமளித்தலுக்கான தேசிய கல்வி நிறுவனம் மற்றும் தரமணியில் உள்ள தி ஸ்பாஸ்டிக் சொசைட்டி ஆகியவற்றால் மதிப்பீடு

செய்யப்பட்டு வருகிறது. மேலும், இந்தக் கருவி காப்புரிமைக்காகவும் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது.

மாணவர்களிடையே புதிய தொழில்நுட்பத்தையும், அறிவியல் கண்டுபிடிப்புகளையும் கண்டறிய ஊக்குவிக்கும் திட்டமானது 2011-ஆம் ஆண்டில் இருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாணவர்கள் கல்லூரியில் இணைந்ததில் இருந்தே புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளை அவர்கள் கண்டறிய ஊக்குவிப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். இந்தத் திட்டத்தின்படி, எந்த இளநிலை அல்லது முதுநிலை மாணவரும் தங்களது புதுமையான ஆராய்ச்சி தொடர்பான திட்டங்களை முன்வைக்கலாம். இதுவரை 675 ஆராய்ச்சி திட்டங்களுக்காக 1.4 கோடி ரூபாயை எஸ்எஸ்என் நிதியாக வழங்கியுள்ளது. கடந்த 2017 ஆம் ஆண்டில் மட்டும் 253 மாணவர்களின் 28 ஆராய்ச்சி கட்டுரைகள் சர்வேதச இதழ்களில் வெளியாகியுள்ளன. மேலும், மாணவர்களின் 10 புதிய கண்டுபிடிப்புகள் காப்புரிமைக்காக விண்ணப்பமும் செய்யப்பட்டுள்ளன.

மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள இந்த வளர்ச்சி குறித்து, எஸ்எஸ்என் கல்வி நிறுவனத்தின் தலைவர் திருமிகு கலா விஜயகுமார் கூறியதாவது:-
கல்லூரியில் மாணவர்கள் சேர்ந்த உடனேயே ஆராய்ச்சி தொடர்பான அவர்களது அறிவை ஊக்குவிக்கும் வகையில் வாய்ப்புகளை வழங்குகிறது. சமூகத்துக்கு மிகவும் பயன் அளிக்கக் கூடிய வகையிலான தயாரிப்புகளை எங்களது மாணவ-மாணவிகள் தயாரித்து வருவது மனதுக்கு மிகுந்த நெகிழ்வையும், மகிழ்ச்சியையும் தருகிறது. ஒரு லட்சம் இந்தியர்களுக்கு இடையே 5 பேர் ஏஎல்எஸ்., எனப்படும் அரிய வகை நரம்பு பாதிப்பு நோயால் பாதிக்கப்படுகின்றனர். இதற்காக, எஸ்எஸ்என் கல்வி நிறுவனம் கண்டறிந்துள்ள இந்தப் புதிய கருவியானது விலையிலும், பயன்பாட்டிலும் ஏற்ற வகையில் இருப்பதுடன் நோயாளிகளின் வாழ்க்கையில் மிகுந்த பயனைத் தரும் என நம்புகிறோம் என்றார்.

இதுகுறித்து, எஸ்எஸ்என் கல்வி நிறுவனத்தின் உதவி பேராசிரியர் எம்.தனலட்சுமி கூறியதாவது:-
எஸ்எஸ்என் கல்வி நிறுவனத்தில் உள்ள ஆராய்ச்சி சூழலானது எங்களுடைய ஆராய்ச்சிப் பணிகளானது முற்றிலும் வடிவமைக்க தொடர்ந்து உதவி செய்து வருகிறது. ஏஎல்எஸ் எனப்படும் தீவிர நரம்பு பாதிப்பு நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு உதவும் வகையிலான கருவிகளை வடிவமைக்க எங்களுக்கு பெரிதும் உதவி செய்துள்ளது. இத்தகைய நோய் பாதிப்பு உள்ளோருக்காக சந்தையில் விற்கப்படும் கருவிகளின் விலையானது ரூ.40 ஆயிரம் வரை உள்ளது. மேலும், அதன் எடை மூன்று கிலோவாக இருக்கிறது. எங்களுடைய தயாரிப்பானது அலுமினியம் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. அதன் எடை 800 கிராம்களாக உள்ளது. விலை ஆயிரம் ரூபாய் ஆகும். இந்தப் புதிய கண்டுபிடிப்பானது விலையில் மட்டுமல்லாது, உயிருக்கே பாதிப்பை ஏற்படுத்தும் ஏஎல்எஸ்., எனும் நரம்பு பாதிப்பு நோயாளிகளுக்கு வசதியாக விளங்கிடும் என்றார்.

**எஸ்எஸ்என் கல்வி நிறுவனங்கள்:**

எஸ்எஸ்என் கல்வி நிறுவனங்கள் பழைய மகாலிபுரம் சாலையில் 250 ஏக்கரில் பரந்து விரிந்து அமைந்திருக்கிறது. கட்டிட பரப்பு மட்டும் 1.8 மில்லியன் சதுர அடியில் அமைந்துள்ளது. இந்தக் கட்டிடம் அதிநவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்பட்டிருக்கிறது. கணினிகள், கண்ணாடி இழை கேபிள்கள் மூலம் இணைக்கப்பட்ட அதிவிரைவு இணையதள வசதிகள், நவீன பட்டறைகள், ஆய்வகங்கள், கருத்தரங்க கூடங்கள், அரங்குகள், நூலகங்கள், உடல்பயிற்சிக் கூடம், விளையாட்டு வளாகம், ஆண் மற்றும் பெண்களுக்கான விடுதிகள் என பல்வேறு சிறப்பு அம்சங்களுடன் அமைந்துள்ளது. 24 மணிநேரம் இணையதள வசதி இருக்கும் வகையில் வை-பை இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. கல்வி நிறுவனத்தில் ஒட்டுமொத்த மாணவர்கள் எண்ணிக்கை 4 ஆயிரத்து 400. இதர தனியார் கல்வி நிறுவனங்களைக் காட்டிலும் எஸ்எஸ்என் கல்வி நிறுவனத்தில் கற்பிக்கும் ஆசிரியர்களில் பிஎச்.டி., பட்டம் பெற்றோரின் சதவீதம் அதிகமாகும்.

## சிவநாடார் அறக்கட்டளை

சிவநாடார் அறக்கட்டளையானது, சிவநாடாரால் தோற்றுவிக்கப்பட்டது. 6.5 பில்லியன் டாலர் மதிப்பு கொண்ட எச்.சி.எல்., எனும் சர்வதேச தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் நிறுவனர் ஆவார். இந்த நிறுவனம் 31 நாடுகளில் செயல்பட்டு வருகிறது. அதில், ஒரு லட்சத்து 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பணியாற்றி வருகிறார்கள். இந்த நிறுவனம் கடந்த 1976 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இந்தியாவில் இருந்து அப்போது தொடங்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களில் எச்சிஎல்., நிறுவனமும் ஒன்றாகும். வன்பொருள் மற்றும் மென்பொருள் தொடர்பான தீர்வுகளைத் தரவும், தொழில்நுட்பம் தொடர்பான சேவைகளை அளிப்பதிலும் எச்சிஎல் நிறுவனம் முன்னிலை பெற்று விளங்குகிறது. மேலும், இந்த அறக்கட்டளையானது சமூக-பொருளாதார பிரிவுக்கு ஒரு பாலமாகவும், தனிநபர்களுக்கு அவர்களது தகுதிக்கேற்ப அதிகாரமளிக்கும் வகையிலும் செயல்பட்டு அந்தப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. இந்தியாவில் வளர்ச்சி அடையாத பகுதிகளைக் கண்டறிந்து அங்கு கல்வி, கலை ஆகிய திறன்களை அளிப்பது இந்த அறக்கட்டளையின் முக்கிய நோக்கமாகும்.

சென்னையில் எஸ்எஸ்என் கல்வி நிறுவனங்கள் *(www.SSN.edu.in)* கடந்த 1996 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்தியாவில் சிறப்பு வாய்ந்த முதல் தர தனியார் கல்வி நிறுவனங்களில் எஸ்எஸ்என் ஒன்றாகும். மேலும், கல்வியில் சிறந்த கிராமப்புற குழந்தைகளைக் கண்டறிந்து அவர்களுக்கு தலைமைப் பண்புடன் கூடிய உறைவிடக் கல்வியை அளிக்கும் வித்யா க்யான் *(www.VidyaGyan.in)* என்ற திட்டத்தையும் சிவநாடார் அறக்கட்டளை மேற்கொண்டு வருகிறது. இது, உத்தரபிரதேசம் புலந்தர்ஷா மற்றும் சிதாபுர் ஆகிய இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், சிவநாடார் பல்கலைக்கழகமானது (www.snu.edu.in) கிரேட்டர் நொய்டா பகுதியில் அமைந்திருக்கிறது. நகர்ப்புறப் பகுதிகளில் சிவநாடார் பள்ளிகளும் *(www.shivnadarschool.edu.in)* தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மேலும்,

சிவநாடார் அறக்கட்டளையானது கிரன் நாடார் கலை அருங்காட்சியகத்தையும் *(www.knma.in)* அமைத்துள்ளது. இது, நவீன மற்றும் பழங்கால கலை அம்சங்களுடன் காணப்படும் மிகப்பெரிய தனியார் அருங்காட்சியகம் என்பது குறிப்பிடத்தக்கது. கலை அம்சங்களை சாதாரண மக்களுக்கும் எடுத்துச் செல்லும் வகையில் இந்த அருங்காட்சியகம் செயல்பட்டு வருகிறது.

**மேலும் ஊடகத் தொடர்புக்கு**

சந்தோஷ் மல்லையா

9841638757.